DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No.99/2024**

**Deposition of LW3 examined as PW2** Dt. 17.02.2026

| | |
|---|---|
| Name | பைசல்ரகுமான் |
| Father's/Husband's Name | முகமதுஇப்ராகிம் |
| Village | நீடூர் |
| Taluk | |
| Age | 54/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 17.02.2026

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் சிமெண்ட் வியாபாரம் செய்து வருகிறேன். புகார்தாரர் முகமதுஅலி எனது அப்பாவின் நண்பன் ஆவார். புகார்தாரர் முகமதுஅலி மலேசியாவிலேயே இறந்துவிட்டார். அவர் பிறந்தது முதல் மலேசியாவிலேயே குடும்பத்துடன் வசித்து வருகிறார். அவருடைய பூர்வீக சொத்துக்கள் நீடூர், சோத்தமங்களம், கங்கணாபுத்தூரில் இருந்தது. சொத்துக்கள் சம்பந்தமாகவும், அவருடைய படிப்புகள் சம்பந்தமாகவும் மலேசியாவில் இருந்து நீடூருக்கு வந்து செல்வார். முகமதுஅலி நீடூர் அருகே உள்ள கங்கணாபுத்தூரில் சொத்துக்கள் வாங்கி அதனை நிர்வகிப்பதற்காக அவரது நண்பரான நஸ்ருல்லாவை 2009-ல் பவர் ஏஜெண்டாக நியமித்து இருந்தார். அதன் மூலமாக சில சொத்துக்களை பெற்று பணத்தை அவரிடம் ஒப்படைத்தார். 2012-ல் முகமதுஅலி தன்னுடைய சொத்துக்களை விற்கவேண்டாம் என்று வாய்மொழியாக கூறினார். அதன்பிறகு 2017-ல் மீண்டும் முகமதுஅலியிடம் பவர் செல்லவில்லை என்றும் புதிதாக பவர் பத்திரம் கொடுக்குமாறு கூறினார். தேவையில்லை நானே நேரில் வந்துவிடுகிறேன் என்று கூறினார். நஸ்ருல்லா போலியாக பவர் பத்திரம் தயாரித்து அதன் மூலம் தன்னுடைய மகள் ரெஜினாபேகத்திற்கு கங்கணாபுத்தூரில் உள்ள புல எண். 375/1-ல் உள்ள நிலத்தில் 156 குழி கிரயம் செய்து கொடுத்தார். மேலும் சில நிலங்களை சுகைன்அகமது என்பவருடைய பவர் ஏஜெண்டான ஹஜ்ஜிமுகமது என்பவருக்கு சில இடங்களை கிரயம் செய்து கொடுத்தார். பின்னர் முகமதுஅலி மலேசியாவில் இருந்து வந்து மேற்படி சொத்துக்களை ஆய்வு செய்த போது நஸ்ரூல்லா

17/2/26

கிரயம் செய்து கொடுத்தது தெரிய வந்து எதிரி மீது புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு ஹஜ்ஜிமுகமது கிரயம் பெற்ற இடங்களுக்கான தொகையை முகமது அலிக்கு கொடுத்து சமாதானம் ஆகிவிட்டபடியால் ஹஜ்ஜிமுகமது இந்த வழக்கில் இருந்து விடுவிப்பு பெற்றதாக முகமது அலி என்னிடம் கூறினார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை